**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை**

**O.S.No. 3/2020**

| | | |
|---|---|---|
| வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி | : | வா.சா.1 |
| பெயர் | : | பாண்டி |
| தகப்பனார் / கணவர் பெயர் | : | கருப்பையா |
| தொழில் | : | |
| கிராமம் | : | |
| தாலுகா | : | |

2025ஆம் ஆண்டு ஜீலை மாதம் 25ம் நாள் வெள்ளிக்கிழமை 1872 ஆம் ஆண்டு இந்திய சாட்சிய சட்டத்தின்படி பெஞ்ச் கிளார்க் திரு.மாஆ.மணியரசன் என்பவரால் ஆணையிட்டு உறுதி கூறி சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டது.

**முதல் விசாரணை:**

நான் இந்த வழக்கின் வாதி. வாதி தரப்பு 1ம் சாட்சி ஆவேன். எனது தரப்பு சாட்சியத்தை எழுத்துமூலமாக நிருபணவாக்குமூலத்தின் பேரில் நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் கண்டுள்ள சங்கதிகள் அனைத்தும் நான் சொல்லி தான் தயார் செய்யப்பட்டது.

1. 30.07.2019ம் தேதிய வாதியின் மனைவியான் ஜெயலெட்சுமி என்பவர் ஆறாவயல் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனு நகல் **வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (1ம் பிரதிவாதி வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

2. 31.07.2019ம் தேதிய புகார் ஏற்புச் சான்றிதழ் அசல் **வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (1ம் பிரதிவாதி வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

3. 06.08.2019ம் தேதிய பிரதிவாதிகளுக்கு வாதி அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் (அஞ்சலக ரசீதுயுடன்) **வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

4. 06.08.2019 மற்றும் 10.08.2019ம் தேதிய 1ம் பிரதிவாதியால் திருப்பி அனுப்பப்பட்ட வழக்கறிஞர் அறிவிப்புகள்-2 அசல்கள் **வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

5. 24.08.2019ம் தேதிய 2ம் பிரதிவாதியின் பதில் வழக்கறிஞர் அறிவிப்பு அலுவலக நகல் **வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

6. 07.08.2019ம் தேதிய வாதியின் வழக்கறிஞர் அறிவிப்பை 2ம் பிரதிவாதி பெற்றுக் கொண்டதற்கான அஞ்சலக ஒப்புதல் அட்டை அசல் **வா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

7. 20.03.2018ம் தேதிய வாதி 1ம் பிரதிவாதியிடம் கடனை திருப்பிச் செலுத்தியதற்கான ரசீதுகள் 4 அசல்கள் **வா.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** (1ம் பிரதிவாதி வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது.)

**(வாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க மேலும் ஆவணங்கள் குறியீடு செய்வதற்காக முதல் விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது.)**